கோரிக்கை எண் XLVI—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,02,600-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XLVII—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,55,82,900-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XLVIII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 600-க்கு மேற்படாத தொகையையும்;
அரசிற்கு வழங்கவேண்டும்."

கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகைகள் வழங்கப்பட்டன.

5. அறிவிப்புகள்.

(அ) **தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா.**

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதாவை இந்த அவைக்குக் கொண்டு வருவதற்கும் அதன் மீது விவாதிப்பதற்கும், மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் தமது இணக்கத்தை தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறேன்.

அதையொட்டி, இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை, இந்த அவைக்குக் கொண்டுவர அனுமதி கோருவார்கள்.

1. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) **தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா.**

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை முன்னுரைக்க அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே, நான் இம்மசோதாவை முன்னுரைக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இம்மசோதா முன்னுரைக்கப்படுகிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) **பேரவை அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள்.**

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில், ஒரு மனதாக நிறைவேறிய தீர்மானத்திற்கு இணங்க, இம்மன்றத்தின் அலுவல்கள் 27-3-1967 முதல் 30-3-1967 வரை இப்போது நான் அறிவிக்கின்ற நிகழ்ச்சி வரிசையின்படி நடைபெறும்.

1967 மார்ச் 25]

27-3-1967 திங்கட்கிழமை.

1. இரண்டு மசோதாக்கள் மீது விவாதமும், அவைகளை நிறைவேற்றுதலும்.

(அ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா, (சட்டப் பேரவை மசோதா எண் 1/1967).

(இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 4/1967).

2. கவர்னர் பேருரை மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

28-3-1967 செவ்வாய்க்கிழமை.

1. இரண்டு மசோதாக்கள் மீது விவாதமும், அவைகளை நிறைவேற்றுதலும்—

(அ) 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/1967).

(இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவை (தகுதியின்மைகள் நீக்கல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1967).

2. கவர்னர் பேருரை மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

29-3-1967 புதன்கிழமை.

கவர்னர் பேருரை மீது விவாதம்—தொடர்ச்சி.

30-3-1967 வியாழக்கிழமை.

கவர்னர் பேருரை மீது விவாதம்—கடைசி நாள்.

இந்த நிகழச்சி நிரல் அச்சிடப்பட்டு உறுப்பினர்கள் எல்லோருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. இந்தப் பேரவையின் கூட்டம் அடுத்து 27-3-1967 திங்கட்கிழமை அன்று காலை 9 மணிக்கு மீண்டும் நடைபெறும்.

பி. ப. 1–34 பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

112. Notification issued with G.O. Ms. No. 4898, Industries, Labour and Housing (Industries), dated the 21st December 1966 relaxing certain rules of the Madras Molasses Control and Regulation Rules, 1958, in favour of A.V.R. and Company, Madras, for molasses import and export out of India, published with the Home Department Notification S.R.O. No. A-6743 of 1958, dated the 4th October 1958, at pages 450–456 of the Rules Supplement to the Part I of the *Fort St. George Gazette*, dated the 15th October 1958. [Laid on the Table of the House under section 54(3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).

B. Report Notification and other Papers.

Nil.